
Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 9 செப்டம்பர் 2007




தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலேயே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று ஜனங்கள் ஆர்ப்பரிக்க, ஒலிவ மலையிலிருந்து எருசலேமுக்குள் இந்த வழியாகத் தான் நடந்து போனார் என்று நம்பப்படுகிறது (மத்.21: 9)

(எங்கள் பயணத்தின் போது எடுக்கப்பட்டது)

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. போதிக்கப் படாதவர்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்களா? 11
3. பெண்கள் பகுதி ........ 14
4. சிறுவர் பகுதி ........ 17
5. வாலிபர் பகுதி ........ 19
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 23
7. நமது செயல்களை மூடி மறைக்கவும் நியாயப்படுத்தவும் நாம் கூறும் போலி சமாதானங்கள் ........ 27
8. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 20 SEPTEMBER - 2007 Issue - 9**


ஆசிரியர் உரை

## நரகத்திலிருப்பவனிலும் நாம் மோசமா?

மறுமையின் மீது நம்பிக்கையுள்ள ஒரு மனிதனைப் பார்த்து, ஒருவேளை அவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், நீங்கள் விரும்பாத இடம் அல்லது உங்களுக்குப் பிடிக்காத இடம் எதுவென்று கேட்டால், எந்தத் தயக்கமும் இல்லாமல் வரும் வார்த்தை நரகம் என்பது. இத்தனைக்கும், இந்த நான்கெழுத்து வார்த்தைக்குச் சொந்தமான இடத்தை இதுவரைக்கும் யாரும் பார்த்ததுமில்லை, அதன் கொடுமையை இது வரைக்கும் யாரும் அனுபவித்ததுமில்லை. இருந்தாலும், இவ்வார்த்தையின் தாக்கம் இறை நம்பிக்கையுள்ள எல்லோருக்குமே இருக்கிறது. இவ்வார்த்தை, இப்பூமியில் வாழ்பவர்களுக்கு மாத்திரமல்ல, வாழ்ந்து, மரித்து, இன்றைக்குப் பாதாளத்தின் ஏதாவது ஒரு பகுதியில் போய்ச் சேர்ந்து, நியாயத்தீர்ப்பின் நாளுக்காகக் காத்திருப்பவர்களுக்கும் பிடிக்காத ஒன்றுதான்.

சர்வ வல்ல தேவனுடைய வார்த்தைகளில் நாட்டமுடையவர்களாயிருந்து, வேத வசனங்களின் உபதேசங்களை ஆர்வத்தோடு கேட்பவர்கள் கூட, நரகம் பற்றிப் பேசப்படுவதைப் பெரும்பாலும் விரும்புவதில்லை. அவ்வளவு ஏன், துப்புரவாக நரகத்திற்கு ஏதுவானதொரு மோசமான வாழ்க்கையை அன்றாடம் நடத்திக் கொண்டிருப்பவர்கள் கூட, நரகம் பற்றிப்

பேசுவதையோ, பிரசங்கிப்பதையோ விரும்புவதில்லை. இதற்குக் காரணம், நரகம் பற்றிப் பரிசுத்த வேதாகமம் கொடுக்கும் காரசார விளக்கம் தான்.

இவ்விளக்கம் இரு வகையானது. ஒன்று, அந்த இடத்தின் கொடுமை பற்றியது. இரண்டு, அங்கு செல்லப்போகும் மனிதர்களின் குணக்கேடு பற்றியது. ஆம், நரகம் பற்றி வேதாகமம் புறம்பான இருள் நிறைந்த இடம் என்றும், அழுகையும், பற்கடிப்பும் உள்ள இடம் என்றும் கூறுகிறது (மத். 8:12). அடுத்து, அது என்றென்றும் அவியாத அக்கினியும், நித்திய ஆக்கினையும் கொண்ட இடம் என்கிறது (மத். 25:41,46). இதைப் படிக்கவே பயமாக உள்ளது. ஆனால், வேதாகமம் அத்தோடு நிற்காமல், நரகம், நித்திய அழிவுக்கான இடம் என்றும், (2தெச. 1:9), கந்தகம் எரிகிற அக்கினிக் கடல் என்றும் விவரிக்கிறது (வெளி. 19:20).

மேலுமாக, இக்கொடுமையான இடத்திற்கு யாரெல்லாம் போவார்கள் என்பதையும் வேதாகமம் விட்டு வைக்கவில்லை. முதலாவது, அந்த இடம் பிசாசுக்கும், அவன் தூதர்களுக்குமானது (மத். 25:41). இந்தப் பிசாசுகளோடு தேவசமூகத்திலிருந்து தள்ளப்பட்ட தூதர்களும், சுவிசேஷத்தைத் தள்ளிய படுபாவிகளும் அங்கிருப்பார்கள் (2பேது. 2:4). ஒருவேளை, இப்படியெல்லாம் சொன்னால் நமக்கு விளங்க வேண்டிய அளவுக்கு விளங்காது என்பதாலோ என்னவோ, பரிசுத்த ஆவியானவர், அங்கே யாரெல்லாம் இருப்பார்கள் என்று நாம் புரிந்து கொள்ளும்படியாகச் சொல்லியுள்ளதை இங்கே கவனியுங்கள். ஆம், **பயப்படுகிறவர்கள், அவிசுவாசிகள், அருவருப்பானவர்கள், கொலைபாதகர், விபசாரக்காரர், சூனியக்காரர், விக்கிரகாராதனைக்காரர் மற்றும் பொய்யர்** (வெளி. 21:8) போன்றோர் இருப்பார்கள்.

இப்படி நரகம், இவ்வளவு மோசமானவர்களுக்கென்று வேதாகமம் பளிச்செனச் சொல்லியிருக்கும்போது, **நரகத்திலிருப்பவனிலும் நாம் மோசமா?**என்று தலைப்பிட்டிருக்கிறீர்களே இது எப்படி நியாயமாகும் என்று நீங்கள் கேட்கக்கூடும். அதுவும், வாசகர்களாகிய எங்களைப் பார்த்தால் உங்களுக்கு அப்படியா தோன்றுகிறது என்று! ஒருவேளை நீங்கள் அப்படிக் கேட்டால், உங்கள் **உணர்வுகளினடிப்படையில்,** நீங்கள் கேட்பதில் நியாயம் உள்ளதென்றும், அதே சமயம், பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத்தின் **செயலினடிப்படையில்,** நியாயம் இல்லையென்றும் தயங்காமல் சொல்லுவேன். இந்த யதார்த்தமான பதிலுக்கு அடிப்படை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளத் தொடர்ந்து படிப்போம்.

மாபெரும் போதகராகிய இயேசு ஆண்டவர், தன் ஊழிய நாட்களில் பயன்படுத்தின உவமைகளில் சுமார் 40 புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. அவைகளில், அநேகருக்குப் பரிச்சயமான உவமை, லூக்கா 16 ஆம் அதிகாரத்தில் காணப்படும் **லாசரு, ஐசுவரியவான்** உவமை. மரணத்திற்குப் பின் மனிதனின் நிலை என்ன என்பதை ஓரளவிற்காகிலும்

நமக்கு வெளிப்படுத்துவது இந்த உவமைதான். இந்த உவமை பல தேவ மனிதர்களால், பல கோணங்களில் கையாளப்பட்டு, பல பாடங்கள் பல சந்தர்ப்பங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், அதற்குள்ளாக மீண்டும் நுழைவது என் நோக்கமல்ல. மாறாக, நரகத்திற்குப் பாத்திரவானாகிவிட்ட ஐசுவரியவானை நமக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தி, அவனை விட நாம் எந்த வகையில் நல்லவர்கள் என்று கேட்பதே என் திட்டம்.

கிட்டத்தட்ட நம் எல்லோருக்குமே அந்த உவமை ஓரளவுக்காகிலும் தெரியும். அதில், பெயர் சொல்லப்படாத ஐசுவரியவான், பெயர் சொல்லப்பட்டிருக்கும் தரித்திரன் லாசரு ஆகிய இரண்டு பேரும் மரித்தார்கள். ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், படிக்காதவனாக இருந்தாலும், படித்தவனாக இருந்தாலும், தாழ்ந்தவனாக இருந்தாலும், உயர்ந்தவனாக இருந்தாலும், அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் மரித்துத்தான் ஆக வேண்டும் (எபி. 9:27). இந்த உவமையில் இவர்கள் இரண்டு பேரும் மரித்தபோது, அடக்கம் செய்வதற்குக் கூட ஆளில்லாத தரித்திரன் லாசரு, தேவதூதரால் ஆபிரகாமின் மடிக்குக் கொண்டு போகப் பட்டான். ஆனால், பணமும், பலமும் கொண்ட ஐசுவரியவான் வீட்டாராலும், உறவுகளாலும், நண்பர்களாலும் சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்லப்பட்டான் (லூக். 16:22). இவன் சரீரம் தான் சுடுகாட்டிலே இருந்திருக்குமேயொழிய, ஆத்துமா அங்கிருந் திருக்காது.

இந்த இரண்டு பேருடைய ஆத்துமாவும் **பாதாளம்** சென்றது. அநேகர், பாதாளம் என்றால், உடனே அதை நரகம் என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால், வேதாகமம் அப்படிப் போதிப்பதில்லை. **பாதாளம் என்பது, ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வரவும், போகவும் முடியாதபடி இரண்டு பகுதிகளைக் கொண்ட ஓர் இடம் (லூக். 16:26). ஒரு பகுதி, தேற்றப் படக்கூடிய இடம் - அது பரதீசு.** சிலுவையில் மரிக்கும் தருவாயில் மனம் மாறிய கள்வன் ஒருவனைப் பார்த்து, இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் (லூக். 23:43) என்று இயேசுவானவர் சொன்ன இடம் இதுதான். இந்த இடத்திற்குத் தான் இயேசுவும் சென்றார் (அப். 2:31) ஆனால், அவர் மூன்றாம் நாளில் உயிரோடே எழுந்து, பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபி. 9:24). ஆனால், ஆதி முதல் மரித்துப்போன எல்லா நீதிமான்களும் நியாயத்தீர்ப்பு வரைக்கும் பரதீசிலே தான் காத்திருக்கிறார்கள் (அப். 2:34).

பாதாளத்தின் இன்னொரு பகுதி **வேதனையுள்ள இடம்.** தேவனுக்கு விரோதமாய்க் கீழ்ப்படியாமல் வாழ்ந்து மரித்த எல்லோரும் இந்த இடத்திலேதான் இருக்கிறார்கள். இங்கு தான், ஏழைக்கு இரங்காமல் வாழ்ந்து மரித்த ஐசுவரியவான் போய்ச் சேர்ந்தான் (16:23,24) ஒரு பகுதியிலிருப்ப வர்கள், இன்னொரு பகுதிக்குக் கடந்து போக முடியாமல் **பெரும் பிளப்பு**

இருக்கிறதாக வசனம் சொன்னாலும் அங்கிருப்பவர்களும், இங்கிருப்பவர்களும் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாது என்று கூறுவதில்லை. எப்படியெனில், வேதனையுள்ள இடத்திற்குச் சென்ற ஐசுவரியவான், தேற்றப்படக் கூடிய இடத்திலிருந்த ஆபிரகாமையும், அவன் மடியிலே லாசருவையும் பார்த்ததோடு பேசியும் உள்ளான். நியாயத் தீர்ப்பிற்குப் பிறகு பரதீசிலுள்ளவர்கள், பரலோகத்திற்கும், வேதனையுள்ள இடத்திலுள்ளவர்கள் நரகத்திற்குமே போவார்கள். ஆகவே தான், வேதனையுள்ள இடத்திற்குப் போய்ச் சேர்ந்த ஐசுவரியவானை நரகத்தின் மகனாக நான் தலைப்பிட்டு சித்தரித்துள்ளேன்.

சரி, தன் தேவ விரோதச் செயலால், நரகத்திற்குப் பாத்திரவானாகி பாதாளத்தின் வேதனையுள்ள இடத்திற்குப் போய்ச் சேர்ந்த ஐசுவரியவானின் செயல்பாட்டைத் தான் நாம் இம்மாத்திற்காகக் கவனிக்கப் போகிறோம்.

ஆம், ஐசுவரியவான் பாதாளத்திலே வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன் **தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசருவின் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்** (லூக். 16:23,24) அதாவது, பாதாளத்திற்கு வந்து சேர்ந்துவிட்ட தன் கதி இவ்வளவு தான் என்று எண்ணாமல், தானும் தேற்றப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று தகப்பனாகிய ஆபிரகாமே என்று கெஞ்சி முயற்சித்துள்ளான். ஆனால், அதற்கு வாய்ப்பே இல்லை என்று தெளிவுபடுத்தப்பட்டது (லூக் 16:25,26).

பிறகு, இந்த ஐசுவரியவான், அதே ஆபிரகாமிடம், .... **அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்து சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்** (லூக். 16:27,28) அதற்குப் பதிலாக, ஆபிரகாம் அவனை நோக்கி; **அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான்** (16:29).

இப்படிச் சொல்லப்பட்ட நிலையிலும், ஐசுவரியவான் சோர்ந்து போகாமல், ...**அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே**, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு ஆபிரகாம்; அவர்கள் **மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும், நம்பமாட்டார்கள்** என்று சொன்னான் என்றார் (16:31). அதாவது, மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட பிரமாணங்களுக்கும், தீர்க்கதரிசி

களைக் கொண்டு தேவன் வெளிப்படுத்திய தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு வல்லமை உண்டு. ஆகவே, மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போக வேண்டிய அவசியமில்லை என்று திட்டமாக அறிவிக்கப்பட்டது. நரகத்திற்குப் பாத்திரவானாய் மாறிவிட்ட இந்த ஐசுவரியவான் **அதோடு தன் பேச்சை நிறுத்திக்கொண்டான்.**

பூமியிலே சம்பிரமமாய் வாழ்ந்து, நரகத்தின் மகனாக மாறிவிட்ட நிலையிலும் இவன் செயல்பட்ட விதம், பூமியிலே இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு சில பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறதாக உள்ளது. அவைகள் என்ன என்று இப்பொழுது பார்ப்போம்.

## I பரலோகம் போக விருப்பம் கொண்டிருந்தான்

நரகத்திற்குப் பாத்திரவனாகிவிட்ட அந்த ஐசுவரியவான் நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், ஒருவன் பரலோகம் செல்ல வேண்டுமென்ற விருப்பமுடையவனாக இருக்க வேண்டும் என்பது.

ஐசுவரியவான், பூமியிலே பகட்டானதொரு வாழ்க்கையை நடத்தினது உண்மைதான். தன் காலடியில் எச்சில் சோற்றுக்காகக் காத்துக் கிடந்தவனைக் கண்டு கொள்ளாமல் விட்டதும் உண்மைதான். ஆனால், மரித்ததற்குப் பிறகு அவன் தன் நிலையை உணர்ந்து பார்த்துள்ளான். உணர்ந்தது மாத்திரமல்ல, தன் நிலையிலே மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்று முயற்சித்துமுள்ளான். பூமியின் வாழ்க்கையில் ஆபிரகாமையும், ஆபிரகாமின் தேவனையும் நினைக்காத அவன், பாதாளத்தில், **தகப்பனாகிய ஆபிரகாமே** என்று கூப்பிட்டு, தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான். வேதனையுள்ள இடத்திற்கு வந்து சேர்ந்து விட்ட தானும், **லாசருவைப் போல் தேற்றப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டு முயற்சித்தான்.** மாற்றத்திற்கு வாய்ப்பில்லை என்று தெரிந்த நிலையிலும், எப்படியாகிலும் முயற்சி வெற்றி பெறாதா என்று பாடுபட்டுள்ளான்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே, பரலோகத்தைப் பற்றிய நம்முடைய எண்ணமும், அதற்கான நம்முடைய முயற்சியும் எப்படியுள்ளது? நன்றாகக் கவனியுங்கள், இவன் நரகத்திற்குப் பாத்திவானாகிவிட்ட நிலையில், எடுத்த பிரயாசை களைப் பார்க்கும்போது, **இவனுக்கு மறுமையில் இப்படியொரு நிலை ஏற்படும் என்று அவன் எதிர்பார்க்கவில்லையென்றே தெரிகிறது.** ஆனாலும், மறு வாழ்க்கை என்பது நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், எதிர்பார்த்தாலும், எதிர்பார்க்காவிட்டாலும், நாம் பூமியில் வாழ்ந்த வாழ்க்கை யினடிப்படையில் தான் தீர்மானிக்கப்படும். யாரும் அதற்குத் தப்ப முடியாது (2கொரி. 5:10). எப்படி இந்த ஐசுவரியவான் தப்ப முடியவில்லையோ அப்படியே நாமும் தப்ப முடியாது.

மாற்றத்திற்கு வழியே இல்லை என்ற நிலையிலும், இந்த ஐசுவரியவான் முயற்சித்திருக்கும்போது, நமக்கெல்லாம் பரலோகம் செல்ல எவ்வளவு வாய்ப்புகள் இப்பூமியில் என்று எண்ணிப்பாருங்கள். இயேசு

சொன்ன உவமையில், **பரலோகத்தின் மேன்மையும், நரகத்தின் கொடுமையும் இவனுக்கு போதிக்கப்பட்டதாக நமக்குச் சொல்லப்பட வில்லை.** ஆனால், நமக்கோ அவைகள் அக்குவேர், ஆணிவேராகப் பிரித்து வேத வசனங்களால் போதிக்கப்பட்டுள்ளது. ஆம், பரலோகத்தில் யார் இருப்பார்கள், அது எப்படிப்பட்ட இடம், அங்கு எவைகள் இருக்கும், எவைகள் இருக்காது, அதற்குள் யார் பிரவேசிக்க முடியும், பரலோகம் பற்றி ஒரு விசுவாசியின் மனநிலை எப்படி இருக்க வேண்டுமென்று இவைகள் எல்லாமே நமக்கு போதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அங்கு போக வேண்டுமென்ற விருப்பமும், அதற்கான பிரயாசமும் நம்மிடத்தில் எந்தளவு சொல்லுங்கள்.

நரகத்திலிருப்பவனிலும் நாம் மோசமா? என்ற தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில் முகம் சுளித்த நாம், இப்பொழுது என்ன சொல்லப்போகிறோம்? பரலோகம் மேன்மையானது என்று பவுலடியார் அறிந்தபடியால்தான், ... **தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்கு எனக்கு ஆசை யுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்..** என்றார் (பிலி. 1:23) அத்தோடு, அதே பிலிப்பி சபையாருக்குச் சொல்லும்போது, **நம்முடைய குடியிருப்போ பரலோகம்** (பிலி. 3:20) என்கிறார். பேதுரு அப்போஸ்தலன், **பரலோகத் திற்கு நம்மை அழைத்துச் செல்லும் கர்த்தருடைய நாளுக்காக ஆவலோடே காத்திருக்கிறோம்** என்று கூறுகிறார் (2பேது. 3:12). அப்போஸ்தலர்களுக்கும், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கும் பரலோகம் வாஞ்சிக்கும் ஓர் இடமாக இருந்துள்ளது. அட அவ்வளவு ஏன், நரகத்திற்குப் பாத்திரவானாகிவிட்ட நம்முடைய ஐசுவரியவானுக்கே அந்த ஆசை இருந்துள்ளது தானே. அப்படியானால், நாம் பரலோக சிந்தையும், வாஞ்சையும், அதற்கான முயற்சியும் இல்லாமல் இருப்பது நியாயமாகுமா? சொல்லுங்கள்.

நரகத்திலிருப்பவனிலும் நாம் மோசமாக வாழ்ந்து கொண்டு, ஒருநாளில் எனக்குப் பரலோகம் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்தால் அது நடக்காது. ஐசுவரியவானுக்கு ஏற்பட்ட கதிதான் நமக்கும் ஏற்படும். அங்கு போய் முயற்சித்தாலும் பயனிருக்காது. ஆகவே, இப்பூமியின் வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் பரலோக சிந்தையோடும், வாஞ்சை யோடும், முயற்சியோடும் வாழ்வோம்.

## II ஆத்தும பாரம் கொண்டிருந்தான்

நரகத்திற்குப் பாத்திரவானாகிவிட்ட நம்முடைய ஐசுவரியவானிட மிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், பிற ஆத்துமாக்கள் அழிந்து விடக் கூடாது என்ற அக்கறையுடையவர்களாயிருக்க வேண்டும் என்பது.

ஐசுவரியவான் என்ன செய்தான்? தான் தேற்றப்பட வேண்டும். தான் போய் மாட்டிக்கொண்ட வேதனையிலிருந்து விடுபட வேண்டுமென்று அதற்காகக் கெஞ்சி முயற்சித்தான். ஆனால், மகனே, அதற்கு வாய்ப்பே

இல்லை. உனக்கான கதவு மூடப்பட்டு விட்டது என திட்டமாக அறிவிக்கப் படட்து. அங்கே, நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? இப்படி ஏமாந்து விட்டோமே என்று மூலையிலே முடங்கி, கண்ணீர் வடித்துக் கொண்டிருந்திருப்போம். ஆனால், இவன் தன் ஆத்தும அழிவையும், சரீர வேதனையையும் கொஞ்சம் மறந்து, **அப்படியானால் தகப்பனே, எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்** என்றான் (லூக். 16:27,28).

உண்மையாகவே இவன் நரக வேதனையில் இருந்துகொண்டு, பிற ஆத்துமாக்களை எண்ணி செயல்பட்டதை நினைக்கும்போது ஆச்சரியமாக மாத்திரமல்ல, வெட்கமாகவும் உள்ளது. எப்படி அவனால் இப்படி முடிந்தது? நாமெல்லாம் இப்படி ஆத்தும பாரம் உடையவர்களாக உள்ளோமா? பிற ஆத்துமாக்கள் அழிகிறதே என்று கவலைப்படுகிறோமா? அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று ஏதாவது ஒரு வகையில் முயற்சிக்கிறோமா? சொல்லுங்கள்!

இயேசு இக்காரியத்தில் எப்படி நமக்கு முன்னுதாரணமாக இருக்கிறா ரென்று பாருங்கள். மனந்திரும்பாத எருசலேமின் குடிகளைப் பார்த்து எப்படிப் புலம்பினார் என கவனியுங்கள். **எருசலேமே! எருசலேமே, தீர்க்கதரிசி களைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கொலை செய்கிறவளே! கோழி தன் குஞ்சுகளைத்தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்ததுக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளை களைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று என்றார்** (மத். 23:37). அந்த இயேசு தன்னுடைய சீடர்களுக்குக் கட்டளை கொடுத்தபோது, நீங்கள் உலகமெங்கும் போய், **சர்வசிருஷ்டிக்கும்** சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார் (மாற். 16:15). ஒவ்வொரு சிருஷ்டியும், ஆத்துமாவும் தேவனுக்கும், இயேசு ஆண்டவருக்கும் முக்கியமாகவே இருக்கிறது.

புறஜாதியானாக இருந்த நூற்றுக்கதிபதி கொர்நெலியு, பேதுரு தன் வீட்டிற்கு வருகிறார் என்ற செய்தி கிடைத்த போது, ஆத்தும பாரம் கொண்டவனாய், தன் உறவின் முறையாரையும், தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் அழைத்துக் காத்திருந்தான் (அப். 10:24). என்பது உங்கள் நினைவிலிருக்கட்டும்.

அன்பானவர்களே, நரகத்திற்குப் பாத்திரவானாகிவிட்ட ஐசுவரிய வானுக்கு ஆத்தும பாரம் இருந்தது. புறஜாதியானாயிருந்த கொர்நெலியு வுக்கு ஆத்தும பாரம் இருந்தது. ஆனால், நாங்கள் அப்படிக் கிறிஸ்தவர்கள், இப்படிக் கிறிஸ்தவர்கள் என்று வாய் நிறையப் பெருமை பேசும் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்கு ஆத்தும பாரமும், ஆத்தும தாகமும் கொஞ்சமும்

இல்லையே, அல்லது இருக்க வேண்டிய அளவுக்கு இல்லையே. இது எப்படி நியாயமாகும்? எத்தனை பேர் நம்முடைய குடும்பத்தாரின் இரட்சிப்பு பற்றி, அயலகத்தாரின் இரட்சிப்பு பற்றி, நம் பகுதி மக்களின் இரட்சிப்பு பற்றி, தேசத்தின் இரட்சிப்பு பற்றி, உலகத்தின் இரட்சிப்பு பற்றிக் கவலைப்படுகிறோம்? அப்படிக் கவலைப்பட்டாதவர்களாக நாம் இருந்து கொண்டு, எனக்குப் பரலோகம் உத்திரவாதம் என்று எண்ணிக் கொண்டுள்ளோமே. இது எப்படி நடக்கும்? நாம் நரகத்திலிருப்பவனிலும் மோசமானவர்களாக இருந்தால், பரலோகம் நமக்கு ஒருபோதும் சொந்தமாகாது.

## III கர்த்தரின் வார்த்தை மீது மரியாதை கொண்டிருந்தான்

நரகத்திற்குப் பாத்திரவானாகிவிட்ட இந்த ஐசுவரியவானிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னொரு பாடம், கர்த்தருடைய வார்த்தை களின் மீது நாம் மரியாதையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பது.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள், நான் பூமியில் சம்பிரமமாய் வாழ்ந்த ஐசுவரிவான் பற்றிப் பேசிக் கொண்டிருக்கவில்லை. அவன், பூமியில் வாழ்ந்தபோது கர்த்தருடைய வார்த்தையை மதித்திருந்தால், அவன் நரகத்தின் மகனாயிருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, அவன் பாதாளத்தில் செயல்பட்ட விதம் பற்றித்தான் பேசுகிறேன்.

முதலில், தான் வேதனையிலிருந்து விடுபட்டுத் தேற்றப்பட வாய்ப்பிருக்கிறதா என்று முயற்சித்தான். **பதில், இல்லை** என்று வந்தது. அடுத்து, தன் உடன் பிறந்தவர்கள் ஆத்துமா அழிவிலிருந்து காப்பாற்றப்பட ஏதாவது செய்ய முடியுமா என்று முயற்சித்தான். அதற்கும் **பதில், இல்லை** என்றே வந்தது. இரண்டாவது முறை பதில் வந்த போது, மோசேயின் பிரமாணங்களும், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும் இருக்கிறது. ஒருவன், வேதனையுள்ள இடத்திற்கு வராமல் தப்பிக்க **அது போதும்** என்று சொல்லப்பட்டது. அதுவரைக்கும், **தகப்பனாகிய ஆபிரகாமே** (வ.24) என்றும், **அப்படியானால், தகப்பனே,** என்றும் (வ. 27), **அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே** (வ. 30) என்றும் பேசி வந்தவன், கொடுக்கப்பட்ட **தேவனுடைய வார்த்தைகள் போதும் என்றவுடன் பேச்சை முடித்துக் கொண்டான்.** இதிலிருந்து அவன், கர்த்தருடைய வார்த்தைகள் போதும் என்பதை ஏற்றுக் கொண்டான் என்று தானே தெரிகிறது. அதாவது, நரகத்தில் இருப்பவனே கர்த்தருடைய வார்த்தை போதும் என்று நம்பியுள்ளான் அப்படித்தானே!

ஆனால், நாம் எப்படி? கர்த்தருடைய வார்த்தைகளோடு, வேறு காரியங்களையும் சேர்த்தல்லவா எதிர்பார்க்கிறோம். அற்புதம் வேண்டும், அடையாளம் வேண்டும், தீர்க்கதரிசனம் வேண்டும் என்றல்லவா அடம் பிடிக்கிறோம். ஐசுவரியவானும் கூட மரித்தோரிலிருந்து ஒருவன் அற்புதமாய் எழுந்து போனால் நன்றாக இருக்கும் என்று கேட்டான் (வ. 30) ஆனால், **அது தேவையில்லை, கர்த்தருடைய வார்த்தைகள் போதும்** என்றவுடன், **கப்சிப்** என்று ஏற்றுக்கொண்டான். இக்காரியத்தில், நரகத்திற்குப் பாத்திரவானாகி விட்ட ஐசுவரியவான் பரவாயில்லையா? அல்லது

காலாவதியாகிவிட்ட (1கொரி. 13:8-10) அற்புதத்தையும், அடையாளத்தையும், தீர்க்கதரிசனத்தையும் நாடுகிற இன்றைய கிறிஸ்தவர்கள் பரவாயில்லையா? சிந்தியுங்கள்.

தேவனுடைய வார்த்தை **எல்லாவற்றுக்கும் போதுமானது** (2தீமோ. 3:16,17) என்று வேதம் சொல்லும்போது, ஏன் அந்த வார்த்தைகளை முழுமையாக நம்பக்கூடாது? எபிரெய ஆசிரியர், வேத வசனங்களின் அழகை எங்ஙனம் விவரிக்கிறார் பாருங்கள். **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், இருதயத்தின் கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது** (எபி. 4:12) உங்களை ஒன்று கேட்கிறேன். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கிற ஓர் அற்புதமோ அல்லது ஒரு தீர்க்கதரிசினமோ வசனம் செய்யும் இந்த வேலைகளைச் செய்ய முடியுமா? எது பெரிது அருமையானவர்களே? அற்புதங்கள் தீர்க்கதரிசனம் போன்றவையா அல்லது எல்லாவற்றுக்கும் போதுமான தேவ வார்த்தைகளா?

அன்பானவர்களே, நரகத்திலிருப்பவனை விட நாம் மேலானவர்களாக இருக்க வேண்டுமானால், தேவனுடைய வார்த்தை எனக்குப் போதும் என்று எண்ணி, அதன் உபதேசங்களுக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். நாம் ஒவ்வொருவரும் **சத்திய வார்த்தைகளினடிப்படையில் இரட்சிக்கப்பட வேண்டும்.** அதை நீங்கள் செய்யத் தயாரா? ஆம், என்றால், விசுவாசித்து (மாற். 16:16), மனந்திரும்பி (அப். 2:35), அறிக்கையிட்டு (அப். 8:37), பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 22:16) கர்த்தராலே அவருடைய சபையில் சேர்க்கப்படுங்கள் (அப். 2:42) ஆவியோடும், உண்மையோடும் ஆராதியுங்கள் (யோவா 4:24). பரிசுத்த வாழ்வு வாழுங்கள் (1பேதுரு. 1:15) பரலோக பாக்கியம் பெறுங்கள் (2தீமோ. 4:8) ஆமென்.

***EZS ராஜநாயகம்***

| **பழைய ஏற்பாடு** | **புதிய ஏற்பாடு** |
|---|---|
| இஸ்ரவேலர் | கிறிஸ்தவன் |
| எகிப்திலிருந்து விடுதலை | பாவத்திலிருந்து விடுதலை |
| செங்கடலை கடந்து | ஞானஸ்நானத்தின் மூலம் |
| வனாந்திரம் | சபை |
| யோர்தானைக் கடந்து | நியாயத்தீர்ப்பைக் கடந்து |
| கானான் | பரலோகம் |

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்

# எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# பத்தாம் வேதாகம கருத்தரங்கம்

# TENTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 19,20 - 2007**
**(வெள்ளி, சனி** ஒரு நாள் அரசு விடுமுறை)

நேரம் : **வெள்ளி காலை 9.00 - மாலை 5.00 மணி வரை**
**சனி காலை 9.00 - மதியம் 1.00 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

கருப்பொருள் : **"கர்த்தருக்குப் பயப்படுதல்"**

வல்லமையான தேவ செய்திகள், பக்தி விருத்திக்கான பாடல்கள் உண்டு.

- *வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.*
- *தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.*

தொடர்பு முகவரி

**கிறிஸ்துவின் சபை**

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

# போதிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா?

எல்லா மனுக்குலத்துக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதில், இயேசு, நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னாரோ, அதைச் செய்வதற்கு சபையில் கொஞ்சம் பேர் தான் உள்ளார்கள். ஏன் இந்த நிலைமை? புள்ளி விவரங்கள் ஓர் அதிர்ச்சியான தகவலை நமக்குக் கொடுக்கிறது. அநேகர், குறிப்பாகக் கல்லூரி செல்லும் பருவத்தில் இருக்கும் இளம் வட்டங்கள், தாங்கள் தேவ கட்டளைகளை அறியாமல் வாழ்ந்து கொண்டுள்ளபடியால், அதாவது சுவிசேஷத்தைக் கேள்விப்படாதபடியால், நியாயத்தீர்ப்பில் இரட்சிக்கப்படுவோம் என்று நம்புகிறார்கள்.

இந்த வாதத்தின் அடிப்படையில் இவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வருகிறார்கள். தேவனைப் பற்றி அறியாமலிருப்பது, அவர்கள் நித்திய காலத்திற்கும் இழந்து போகாமலிருக்கச் செய்யுமானால், நாம் சுவிசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது. ஏனெனில், நாம், போதித்து, அவர்கள் இரட்சிப்பின் செய்தியை ஒருவேளை தள்ளிவிட்டால், நியாயத்தீர்ப்பின் நாளில் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள்!

இப்படி, சுவிசேஷத்தைக் கேள்விப்படாத எல்லா ஜனங்களும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று நம்புபவர்கள், கர்த்தருடைய இரட்சிப்பின் செய்தியை அவர்களுக்கு எடுத்துச்செல்வதில் எந்த ஒரு முயற்சியும் எடுக்கமாட்டார்கள். தங்கள் அறியாமையினிமித்தம் அவர்கள், நித்திய காலத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருப்பது உண்மையானால், நாம் அவர்களுக்குப் போதிப்பதில் எந்த ஒரு நன்மையும் செய்வதில்லை.

இவர்களின் இந்தக் குதர்க்க வாதம், தர்க்க ரீதியாக சரியாக இருப்பது போல் தோன்றினாலும், வேதாகமத்தின் அடிப்படையில் தவறானது. உண்மை என்னவென்றால், ஜனங்கள், சுவிசேஷத்தைக் கேட்பதாலோ, கேட்காமல் இருப்பதாலோ இழந்து போகிறதில்லை. மாறாக, பாவிகளாயிருப்பதாலும், பாவத்தில் இருப்பதாலுமே இழந்து போகிறார்கள். அவர்கள் பாவிகளா யிருப்பதால், தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறாத நிலையில் மரிக்கும் போது, நித்திய காலத்திற்கும் இழந்து போகிறார்கள்.

ஆனால், அவர்கள் எப்படி இரட்சிக்கப்படமுடியும்? அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும், இயேசு கிறிஸ்துவால் அவர்களை இரட்சிக்க முடியும், ஆனால் அவருடைய சித்தத்தை கேள்விப்பட்டபிறகு இரட்சிக்கப்படும்படி சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (மாற்கு 16:15,16). தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து

வெளிப்படும்போதுஅப்படியாகும் (2தெசலோனிக்கேயர் 1:7,8). இங்கே பவுல் சொல்கிறதைக் கவனியுங்கள், அதாவது தேவனை அறியாதவர்களையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களையும் தண்டிக்கும்படி இயேசு திரும்ப வருகிறார் என்று சொல்லுகிறார். மேலும், பேதுரு இப்படியாகக் கேட்கிறார்: நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமான்னே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? (1பேதுரு4:17,18) இதற்கு தெளிவான பதில் இருக்கிறது.

மனுஷனும், மனுஷியும் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாத போது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் பாவிகளானார்கள். ஆதாம், ஏவாளுடைய பாவத்தை சுமந்து கொண்டு யாரும் பிறவாத போதிலும், **ஒருவன் நன்மை, தீமையை அறிந்து கொள்ளும் வயது வரும்போது அவன் பாவியாகிறான்.** பவுல் சொல்லும்போது, எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி என்றும், பாவத்தின் சம்பளம் மரணம் ரோமர் 3:23; ரோமர் 6:23 வசனங்களில் சொல்லியிருக்கிறார். அது உண்மையாக இருந்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு ஒரு பாவி கீழ்ப்படிந்தால் (மாற்கு 16:16) அவன் இரட்சிக்கப்பட முடியும், மேலும் அவன் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அவன் பரலோகத்தில் இரட்சிக்கப்படும்படி சகல பாவங்களையும் கழுவிச் சுத்திகரிக்கும் (1யோவான் 1:7).

ஆனால், ஒரு பாவி எப்படி தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்? அவன் போதிக்கப்பட வேண்டும். எனவே தான் கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கும், அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டார் (மாற்கு 16:15). நாம் சகல ஜாதிகளுக்கும் உபதேசம் பண்ண வேண்டும் என்று மத்தேயுவில் சொன்னார் (மத்தேயு 28:19,20). ஆனால், மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தால் ஏன் இதைச் செய்ய வேண்டும்?

கர்த்தர் தம்முடைய சித்தத்தை அறியாதவர்களை இரட்சித்துக் கொண்டு, சுவிசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லாததினால் கீழ்ப்படியாமைக்காக நம்மை ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்து பாருங்கள்!. அதன்பின்பு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய அவர்களுடைய தொடர் தோல்வியினால் அவர்கள் இழந்து போகிறதற்கு காரணமாகின்ற சுவிசேஷத்தை அவர்களிடத்தில் எடுத்துச் சென்றால் என்னமாயிருக்கும்? என்ன கலப்பான உலகமாக அது இருக்கும்! இரட்சிக்க உத்தேசித்திருக்கிற செய்தி உண்மையிலேயே ஆக்கினையாக மாறிவிடும். ஆனால், உண்மை என்னவென்றால் அறியாமையுள்ளவர்கள் தங்கள் பாவங்களினால் ஏற்கனவே இழந்து போய்விட்டார்கள். அவர்களுடைய ஒரே நம்பிக்கை நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதுதான். ஒரு மனிதன் அறியாமையில் இரட்சிக்கப்பட முடியுமென்றால் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு எதற்காக

சிலுவையில் மரித்து இரட்சிப்பிற்கான கிரயத்தை செலுத்தி, நித்திய ஜீவனின் நம்பிக்கையை ஏன் கொடுக்க வேண்டும்? அந்த விஷயத்தில் **அறியாமை கிறிஸ்துவின் இரத்தத்தை விட மிகவும் வல்லமையுள்ள இரட்சிக்கிற ஒன்றாக மாறிவிடும்!**

ஆனால், யாருமே பாவத்தில் இரட்சிக்கப்பட முடியாது. அதைப் போலவே யாருமே **அறியாமையில்** இரட்சிக்கப்பட முடியாது. மேலும், தேவனை அறியாதவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல நாம் தவறினால், தங்கள் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்கின்ற அறியாமையினால் அவர்கள் மாத்திரம் இழந்து போகிறதில்லை, நாமும் தேவனுக்கு கீழ்ப்படியாததால் நாமும் இழந்து போவோம். மறுமுனையில், நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்று அதற்கு கீழ்ப்படிய மறுத்ததினாலோ, தவறினதினாலோ அவர்கள் இழந்து போனால், இயேசு நம்மை எதைச் செய்ய கேட்டுக் கொண்டாரோ அதைச் செய்ததினால் நாம் இரட்சிக்கப்படுவோம்.

அப்போது இந்த முழு உலகமும் சிறந்த அறிவுள்ளதாக விளங்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். உதாரணமாக, வேதாகமம் உலகில் உள்ள அநேக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு உலகமுழுவதும் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. கத்தோலிக்க மற்றும் புரோடஸ்டன்ட் சபைகள் தங்கள் ஊழியர்களை உலக முழுவதும் அனுப்பி, ஜனங்களிடத்தில் குறைந்தபட்சம் தேவன் ஒருவர் இருக்கிறார், இரட்சகர் இருக்கிறார் என்றும், வேதாகமம் அவர்களுக்கான செய்தி என்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நிச்சயமாகவே, கிறிஸ்துவின் சபையாரால் ஸ்தல ஊழிய முயற்சிகள் மற்றும் அஞ்சல் வழி பாடம் போன்றவைகளால், அநேக போதனைகள் செய்யப்படுகின்றன. கிறிஸ்துவின் சபைகள் உலகின் முக்கியமான நாடுகளில் இருக்கின்றன, முக்கியமான பட்டணங்களிலும், எண்ணற்ற சிறிய பட்டணங்களிலும் காணப்படுகின்றன.

இந்த உண்மைகளோடு கூடுதலாக இலக்கிய பதிப்புகளின் விநியோகம், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்னும் எண்ணற்ற வழிகளில் கிறிஸ்துவின் போதனைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. வேதாகம செய்தி பகுதியாகவோ, தவறாகவோ, அல்லது அதன் முழு சத்தியத்தோடு உலகில் உள்ள பெரும்பாலான மக்களிடத்தில் சென்றடைந்து இருக்கிறது, இது மக்கள் மத்தியில் மனிதன் இழந்து போயிருக் கிறான் அவனுக்கு இரட்சகர் ஒருவர் தேவை என்கின்ற உண்மையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே, இப்படிப் பட்டவர்களிடத்தில் சத்தியம் ஓரளவு அறிவிக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் தொடர்ந்து அதைப்பற்றிய அறிவை ஏன் வளர்த்துக் கொள்ள வில்லை என்று தேவன் இவர்களிடத்தில் கணக்குக் கேட்பார், இதை நியாயத்தீர்ப்பு தான் வெளிப்படுத்தும்.

ஆனால் நிச்சயமாகவே தேவனுடைய வார்த்தையை எடுத்துச் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒவ்வொருவருக்கும் அறிவித்து நம்முடைய வேலையை முடிப்பது நம் கடமையாக இருக்கிறது. அறியாமை அல்ல - கிறிஸ்துவின் இரத்தமே பாவத்திலிருந்து ஆத்துமாவை இரட்சிக்க முடியும்.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# பிள்ளைப் பேற்றினால் அவள் இரட்சிக்கப்படுவாள் என்பதன் பொருள் என்ன?

"அப்படியிருந்தும் தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" (1தீமோ. 2:15).

மேலே கூறப்பட்டுள்ள வசனப் பகுதியை நாம் பார்க்கும்போது ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில், ஏதேன் தோட்டத்தில் நடந்த ஆதாம், ஏவாள் இவர்களின் மீறுதலுக்கு நாம் அழைத்துச் செல்லப்படுகிறோம். கீழ்ப்படியாமையினால் ஏவாள் செய்த பாவத்திற்காக தேவன் அவளுக்கு தண்டனையைக் கொடுத்தபோது, "நீர் கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையைப் பெருகப்பண்ணுவேன் என்றும், நீ வேதனையோடே பிள்ளை பெறுவாய்" என்றும் கூறினார். அத்தோடு, "உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன், **அவர் உன் தலையை நசுக்குவார். நீர் அவர் குதிங்காலை நசுக்குவாய்**" என்று சர்ப்பத்துக்கும் சாபமாகவும் கூறினார் (ஆதி. 3:15) இந்த வசனம் ஒரு ஸ்திரீயின் மூலமாக மேசியா பிறப்பார் என்பதற்கு முதல் தீர்க்கதரிசனமாகும்.

**இப்படியாக எந்தப் பெண்ணின் கீழ்ப்படியாமையினாலே பாவமும், மரணமும் உலகத்திற்குள் வந்ததோ, அதே பெண் இனத்தைச் சேர்ந்த கன்னி மரியாளிடத்தில் பிறந்த இயேசுவின் மூலமாக, பாவத்திற்கு விமோச்சனமும் வர வேண்டியதாயிற்று. இந்த வகையாக, கீழ்ப்படிதலுள்ள மனுக்குலத்துக்கு இரட்சிப்பு என்பது பிள்ளைப்பேற்றின் வழியாக வரவேண்டியதாயிற்று.**

ஆனால், இத்துடன், "பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" என்பதற்கு, வேறு இரண்டு அர்த்தங்களும் உண்டு.

**தேவன், ஆதாமுக்கும், அதைத் தொடர்ந்து ஆண் இனம் முழுமைக்கும் குடும்பத்தின் சரீரத் தேவைகளைச் சந்திக்கும் பொறுப்பை கொடுத்தபோது, பெண்ணுக்கு குடும்பத்தையும், பிள்ளைகளையும் பராமரிக்கும் பொறுப்பைக் கொடுத்தார். 1தீமோ 5:15ல் பார்க்கும்போது, பெண்கள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும் அறிவுறுத்தப் படுகிறார்கள். மேலும், தீத்து 2-ம் அதிகாரம் 4,5 ஆகிய வசனப்பகுதிகளில், முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீ களுக்குப் புத்தி சொல்லும் வகையில், பாலிய ஸ்திரீகள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ள வர்களும், தெளிந்த புத்தியுள்ள**

**வர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர் நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய்.... இருக்க வேண்டுமென்று கூறுகிறார்.**

தேவனால் கொடுக்கப்பட்ட இந்த வேலைகளை அவருக்குப் பிரியமுண்டாக்கும் வகையில் நிறைவேற்றும் பெண்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற முடியும். குடும்பத்தையும், பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளும்படியான தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிவதென்பது ஒவ்வொரு பெண்ணாலும் கட்டாயம் செய்து முடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில், பெண்ணுக்கான மீட்பின் திட்டத்தில் இதுவும் ஒரு பங்காகும். இப்படியாக ஸ்திரீயானவள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.

**பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் என்பதற்கு வேறு ஒரு அர்த்தத்தையும் நாம் சொல்ல முடியும். குழந்தைகளைப் பராமரித்து வளர்க்கும் காலங்களில், அவளுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அதிகமான தடைகளும், இடையூறுகளும் பிள்ளைகளாலேயே சந்திக்க நேரிடும். தன் குழந்தைகளை ஆராதனைக்கு அழைத்துச் செல்லும் ஒரு பெண், தொடர்ந்து அந்தக் குழந்தைகள் மீது கவனம் வைத்து அவர்களுடைய அழுகை, துள்ளல், நெளிதல், சத்தம், பசியாற்றுதல் போன்ற காரியங்களைக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. அங்கே அவளால் தடை இல்லாமல் ஆராதிக்க முடிவதில்லை. ஒருவேளை அவர் சபை கூடிவருதலை விட்டு விடாமல், பல ஆண்டுகளாக ஆராதனையிலே ஒழுங்காக பங்கு பெற்று வந்தாலும், குழந்தைகள் நிமித்தமாக தேவனை ஆராதிப்பதற்கேற்ற ஒரு சரியான மனநிலையைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.**

குழந்தைகள் மற்றும் சிறார்களை வளர்ப்பதில் உள்ள பிரச்சினைகள் எப்படிப்பட்டவைகளாக இருக்கும் என்பது தேவனுக்கு முன்பே தெரியாததல்ல. ஏனெனில், குழந்தைகளின் அக்காரியங்களை கவனிக்கும் படியான சிறப்புப் பண்புகளாகிய பொறுமை, இளகின இருதயம், குறிப்பால் உணர்ந்து கொள்ளும் தன்மை, எந்நிலையிலும் காட்டப்படும் அன்பு ஆகியவைகள் படைப்பிலேயே பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது பெண்களுக்கே உண்டான பொதுவான பண்புகள். ஆண்களுக்கு இந்த அரிய பண்புகள் கொடுக்கப்படவில்லை. ஒரு தாய், தன் தாய்மைக்கான காரியங்களை அன்றாடம் செய்யும்பொழுது, தேவன் தனக்கு கொடுத்துள்ள திறமைகளில் வளர்ந்து, பிள்ளைகளை கவனிக்கும் காரியத்தில் அன்பிலும், பொறுமையிலும், ஞானத்திலும் மிகவும் பெருக முடியும். ஆகவே, ஒரு பெண் கொடுத்துள்ள வேலையைச் சரியாகச் செய்வதின் மூலம் அவள் தன் வாழ்க்கையை வளமாக்குவதோடல்லாமல் தன் பக்தி நிலையையும் விருத்தியடையச் செய்ய முடியும்.

ஆனால், பிரச்சினையைத் தரும் அந்த நாட்களிலெல்லாம் அவள் உண்மையுள்ளவளாக இருக்க வேண்டும். தொந்திரவில்லாமல் தேவனை ஆராதிப்பதற்கு சமயம் கிடைக்காவிட்டாலும், வசனங்களைப்படித்து தன் ஆவிக்குரிய பசியைத் தீர்ப்பதற்குத் தேவையான நேரம் கிடைக்கா விட்டாலும், தன் ஆவிக்குரிய எண்ணங்களையும், கருத்துக்களையும், பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கு முடியாவிட்டாலும், அவள் தேவனுடனான தன்னுடைய தனிப்பட்ட உறவை சரியாக வைத்துக் கொள்வதற்கு கவன முள்ளவளாக இருக்க வேண்டும். அவள், தாய்மைக்குண்டான சவாலை ஏற்றுக் கொள்ளக் கூடியவளாக இருக்க வேண்டியிருப்பதால், கீழ் வரும் காரியங்களை அவள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**❀ தேவன் மீது ஆழமான விசுவாசம்**

**❀ அவருடைய விசாரிப்பைச் சார்ந்திருப்பது**

**❀ அவர் மீது அளவுகடந்த அன்பு கொள்வது**

**❀ பரிசுத்தமாய் வாழ்வது**

**❀ இவைகளை ஏற்று அவள் வாழும்போது, சுயக்கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்கான ஒழுங்கை பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கும்.**

இவைகளையெல்லாம் ஏன் இவள் கடைப்பிடிக்க வேண்டும்? இவ்வளவு சவால்களுக்கு மத்தியிலும் தேவனோடு தனக்கிருக்கும் உறவை தன் வாழ்க்கையின் மிக முக்கியமான பங்காக ஏற்று வாழ்ந்து காட்டாத பட்சத்தில், தன் பிள்ளைகளுக்கு உயிரோட்டமுள்ள விசுவாசத்தை அவளால் கொடுக்க முடியாது. ஆனால், தன்னுடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய வழி காட்டுதலைக் கொடுக்கும்போது, அவள் தன்னுடைய வளர்ச்சியில் பாடுபட நேர்ந்தாலும் கூட, அது அவள் ஒரு முழுமையான ஆவிக்குரிய தன்மையைப் பெற்றுக் கொள்ள உதவும். எப்படியெனில், அவள் தன்னுடைய வாழ்க்கையிலும், விசுவாசத்திலும், தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலிலும் வரும் எல்லாவிதமான சவால்களையும் சந்தித்து வெற்றி பெற முடியும்.

அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடும் விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.

**ரேச்சல்நாயகம்**

## 7 விலையேறப் பெற்ற காரியங்கள்

1. விசுவாசம் 1 பேது 1:7
2. இரத்தம் 1 பேதுரு 1:19
3. மூலைக்கல் 1 பேதுரு 2:4,6
4. கிறிஸ்து 1 பேதுரு 2:7
5. ஆவி 1 பேதுரு 3:4
6. விசுவாசம் 2பேதுரு 1:1
7. வாக்குத்தத்தம் 2 பேதுரு 1:4

சிறுவர் பகுதி

# பனிக்கரடிகள்

## (POLAR BEARS)



**எ**னக்குப் பிரியமான சிறுதம்பி தங்கைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் இந்த இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சிறார்களே. இந்த மாதம் நாம் தேவனுடைய படைப்புகளில் அரிய ஓர் உயிரினத்தைப் பற்றி பார்க்கப் போகிறோம்.

அது என்ன தெரியுமா? ஆம்! பனிக்கரடிகள் தான். சரி அவை எங்கு வாழ்கின்றன தெரியுமா? **உலகத்தின் உச்சியில்** என்று உங்கள் பதிலாக இருந்தால்.... சபாஷ்... சரியான பதில் தான். பனிக்கரடிகள் ஆர்டிக் பகுதியில் வாழ்கின்றன. அதாவது, வடதுருவத்தில் வாழ்கின்றன. அவை கனடா, ரஷ்யா, கிரீன்லாந்து போன்ற நாடுகளில் மட்டும் வாழ்கின்றன. ஏனென்றால் இந்த நாடுகள் வடதுருவத்தை ஒட்டி உள்ளன.

சரி, இந்த பனிக்கரடிகள் இவ்வளவு குளிரான இடத்தில் எப்படி வாழ்கின்றன என்றா யோசிக்கிறீர்கள்? நீங்கள் யோசித்தது சரிதான். ஆனால், அவைகளுக்கு தேவன் ஏற்ற உடல் அமைப்பைக் கொடுத்திருக்கிறார். அப்படி என்ன அமைப்பு என்று யோசிக்கிறீர்களா? அவைகளுக்கு தேவன் தடிப்பான ரோமத்தை கொடுத்திருக்கிறார். அவைகள் வெள்ளை நிறம் முள்ளவை. குளிரை தாங்குவதோடு இல்லாமல் சூரிய ஒளியை உள்வாங்கும் செயலையும் செய்கிறது. இது உள்வாங்கும் சூரிய ஒளியை வைத்து தனக்கு தேவையான சூட்டை பனிக்கரடியின் உடம்பு ஏற்படுத்திக் கொள்கிறது. பாருங்கள், தேவனுடைய படைப்பையும், பராமரிப்பையும்

அவைகள் மிகப்பெரியவைகள். அவைகளின் எடை சுமார் 700 கிலோ. அதன் நீளம் 11 அடி; ஆனால், வேகமாக ஓடும் திறன்பெற்றவை. ஆனால் மெதுவாக நடப்பவைகள், இன்னொறு ஆச்சரியமான விஷயம் என்ன வென்றால், இவை நீரில் நீச்சல் கூட அடிக்குமாம். அவைகளுக்கு உணவு என்ன தெரியுமா? ஈல்மீன், பறவைகள் மற்றம் சில பழவகைகள். பனிக்கரடிகள் சிறந்த மோப்ப சக்தி கொண்டவை. வெகுதூரத்திலிருந்து தங்கள் உணவை கண்டுபிடிக்கும் திறன் கொண்டவை.

ஆனால், சோகம் என்ன தெரியுமா? இந்த இனம் அழிந்து கொண்டு வருகிறது. உங்களைப் போல என்னைப் போல இவைகள் தேவனுடைய ஞானத்தின் வெளிப்பாடாயிருக்கிறது. தேவனுடைய கிரியைகளுக்கு நன்றி செலுத்தி, அவைகளை இயன்றவரை பாதுகாப்பதே நம் கடமை. என்ன செய்வோமா?

**R.A.R. NAYAGAM.**


## கண்டுபிடியுங்கள்

<u>மேலிருந்து கீழ் :</u>

1. யோவானுக்கு தேவன் தரிசனம் கொடுத்த இடம் (5) (வெளி. 1:9)
3. ஈசாக்கை பலியாக கொடுக்கும்படி கட்டளையிட்ட தேசம் (3) (ஆதி. 22:2)
5. ஆதியிலே வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவர் (3) (ஆதி 1:1)

<u>இடமிருந்து வலம் :</u>

1. கைவேலையல்லாத நித்திய வீடு (2கொரி. 5:1) (5)
2. விசுவாசத்தில் உத்தம குமாரன் (1தீமோ 1:21) (5)
4. பத்து வாதைகளில் ஒன்று (யாத். 8:21) (3)



## இதையும் வட்டமிட்டுக் கண்டுபிடியுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | தி | யா | க | ம | ம் | ஆ | இ |
| க | சா | ம | ம் | ம | த் | மோ | ச |
| ஏ | சு | ம | க | த | கி | ஸ் | ங |
| க | ஏ | பா | ஸ் | ச | கீ | த | ம |
| சி | உ | யா | ர் | ரி | ப | ங் | த |
| ங | ஸ் | ப | த | தி | றா | ச | ச |
| ப | ர | கு | ஸ் | ஸ் | யா | ம | த |
| க | ஸ் | ரா | எ | ரே | மி | யா | ர |

<u>பழைய ஏற்பாட்டு புத்தகங்கள்</u>

ஆமோஸ்
எஸ்தர்
சங்கீதம்
ஆதியாகமம்
எரேமியா
எஸ்றா
ஏசாயா

**இதைக் கிழிக்காமல் தனித்தாளில் சரியான பதில் எழுதி அனுப்பவும். பரிசு உண்டு.**

வாலிபர் பகுதி

# உலக சிநேகம் வேண்டாம்

பிரியமான வாலிப நெஞ்சங்களே, உங்களை இந்தக் கட்டுரையின் மூலமாக மறுபடியும் சந்திப்பதில் மனமகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்களை அதிகமாக கவர்ந்து இழுக்கக்கூடிய காந்த சக்தியாக பாவம் ஓங்கி நிற்கிறது. தொலைக்காட்சி, நாளிதழ், இணையதளம் போன்றவைகளில் வாலிபப் பெண்களையும், ஆண்களையும் குறிவைத்து அல்லது அவர்களை இரையாக்கத்தான் வேட்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களும் அதற்கு மிக சுலபமாகப் பலியாகிவிடு கின்றனர். அதுமட்டுமல்ல, இன்றைய இளையதலைமுறையினர் மத்தியில் பரவலாக ஒரு எண்ணம் நிலவுகின்றது, அதென்னவென்றால், இந்த உலகத்தார் செய்கிறது போல நாமும் செய்தால் தான் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவோம் என்றும், இந்த உலகத்தின் போக்குக்கு ஏற்ப நம்முடைய வாழ்க்கை பாணியை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் இல்லை யென்றால் நம்மை கற்கால மனிதர்களாகப்பாவித்து ஒதுக்கி வைத்து விடுவார்கள், ஏளனம் செய்வார்கள் என்று எண்ணுவது. அதுமுற்றிலும் தவறானது, நாம் வாழ்கின்ற இந்த உலகம், வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும். எனவே, இந்த உலகத்தின் மக்கள் நம்மை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை, தேவன் நம்மை எப்படிப் பார்க்கிறார் என்பது தான் நமக்கு முக்கியம், அதுவே இந்த உலகத்திற்கும், இனி வரவிருக்கின்ற உலகத்திற்கும் பிரயோஜனமுள்ள தாயிருக்கும். இந்த இளைய சமுதாயம் நாகரீகம் என்கின்ற போர்வையில் அநாகரீகமான காரியங்களில் ஈடுபட்டு தங்களை மாய்த்துக் கொள்வது மாத்திரமல்ல பெற்றோர்களுக்கும், தேசத்துக்கும் பெருந்தலை வலியாக இருக்கின்றனர். நம் தேசத்தின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 40% வாலிபர்களாயிருக் கிறார்கள். இந்த வாலிபர்கள் உலகத்தின் போக்கின்படி போகாமல் **கிறிஸ்துவின அடிச்சுவடுகளைப் பின்பற்றினால்** நம் பாரத தேசம் இயேசுவுக்கு சொந்தமாகும். சரி, இப்போது வாலிபர்கள் எப்படியாக இருக்க வேண்டும் என தேவன் சொல்லுகிறதைப் பார்ப்போம்.

**I உலகத்தால் கறைபடாதபடிக்குக் காத்துக் கொள்ள வேண்டும்.**

நம்முடைய பாவங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டப் பிறகு கெட்ட சகவாசங்களிலிருந்து பிரிந்து புறப்பட்டுப் போய் அசுத்தமானதைத் தொடாதிருக்க வேண்டும், இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான

சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும் (ரோமர் 12:2). நோவாவின் குமாரர்கள் துன்மார்க்க மான சமுதாயத்தின் மத்தியிலும் தங்களை கறைபடாதபடிக்குத் தங்களைக் காத்துக்கொள்ளவில்லையா? அநேக வாலிபர்கள் இன்று சாக்குபோக்கு சொல்கின்றனர். நோவாவின் காலம் வேறு நாம் வாழ்கின்ற இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு வேறு என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். தேவன் மனிதனுக்கு எல்லாக் காலங்களிலும் பொருந்தக் கூடிய கட்டளை களைத்தான் கொடுத்திருக்கிறார். எனவே, காலத்தின் கட்டாயத்தினால் இப்படி செய்ய வேண்டியதாயிற்று என்று சொன்னால் தேவன் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார். இன்றைய வாலிபர்கள் அநேக புதுவகையான பாவங்களில் ஈடுபடுவதற்கான காரணம், அவர்களுக்கு பாவத்தின் விளைவுகளைப் பற்றிய நினைப்பே இல்லை. அதைப்பற்றி சொன்னாலும் இந்த உலகத்தில் துன்மார்க்கமாக வாழ்கின்ற சிலரை மேற்கோள் காட்டி இவர்கள் எல்லாரும் செல்வச் செழிப்புடன் எந்த நோயுமின்றி சுகமாய் வாழ்கிறார்களே! வேறு எங்காவது போய், யார் காதிலாவது பூச்சுற்றுங்கள்! என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். வாலிபர்கள் இந்த மெத்தனப்போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

## II பாவம் நிறைந்த உலகத்தோடு நாம் கலவாதிருக்க வேண்டும்:

தேவன் ஆரம்பத்திலிருந்தே பாவத்தை வெறுக்கிறார், சிறு துளி பாவம் கூட தம்முடைய பிள்ளைகளிடத்தில் இருப்பதை அவர் விரும்புவதில்லை. பாவம் எப்போதுமே துக்கத்தை வருவிக்கும். இதற்கு வேதாகமத்திலிருந்தும் வெளியிலிருந்தும் அநேக உதாரணங்கள் உள்ளன. ஆதாம் பாவத்தின் முதல் கனி **பயம்** எனக்கற்றுக் கொண்டான். அதற்கு அவன் நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளிந்து கொண்டேன் என்றான், (ஆதியாகமம் 3:10). இன்றைய நாட்களில் வாலிபர்கள் பாவத்தைப் பார்த்து பயப்படுவதே இல்லை. பாவத்தில் ஈடுபடு பவர்களிடம் சகவாசம் வைத்துக் கொள்வதைப் பெருமையாக நினைக் கின்றனர். இந்த மனப்பான்மை சமீபகாலமாக பெருகி வருகிறது. அதுமாத்திரமல்ல பாவத்தின் விளைவுகளைப் பற்றியும் சற்றேனும் கவலை இல்லாதவர்களாய் காணப்படுகிறார்கள். பாவம் சரீரத்தையும், ஆத்துமா வையும் அழித்துவிடும். பாவம் தரும் சந்தோஷம் நீடித்திருக்காது. அதிக நேரம் நீடிக்கும் சந்தோஷத்தைத் தரக்கூடிய எந்தவொரு பாவமும் இல்லை. எனவே அற்பகால சந்தோஷத்தைத் தரும் பாவங்களை விட்டு விலகி நித்திய சந்தோஷத்தைத் தரும் தேவனுக்கடுத்தக் காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம். **தேவன் நாம் அந்த நித்தியமான பரலோக சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.** எனவே தான் அநித்தியமான பாவசந்தோஷங்களை விட்டு நாம் விலகி ஓட வேண்டும் என்று விரும்புகிறார். உலகத்தன்மை ஒருவகையான பாவமாயிருக்கிறது. தேவன்

நாம் குடியிருக்கும்படி இந்த உலகத்தைத்தான் நமக்கு நியமித்திருக்கிறார். ஆயினும் நாம் இந்த உலகத்திலே பிரித்தெடுக்கப்பட்ட ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் என்று விரும்புகிறார். எனவே தான் தேவன் யாக்கோபு மூலமாக "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால், உலகத்து சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" என்று சொல்கிறார் (யாக்கோபு 4:4). இதன் அர்த்தம் நாம் இந்த உலகத்தில் யாரையும் நேசிக்கக்கூடாது, அன்பு செலுத்தக்கூடாது என்பதல்ல. நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்" (யோவான் 13:35). இந்த வசனத்தின்படி, இந்த உலகத்தில் உள்ளவர்களிடம் நாம் அன்பு கூறுவது அவசியமாயிருக்கிறது. ஆனால், தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை செய்பவர்களோடு நாம் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுடைய துர்க்கிரியைகளில் நாம் பங்கு பெறக்கூடாது. உலகத்தன்மை நம்முடைய ஆவிக்குரிய நிலையை முற்றிலும் அழித்துவிடும்.

சாத்தான் கிறிஸ்தவர்களுடைய இருதயத்தில் நாம் இந்த உலகத்தோடு ஒத்துப்போனால் தான் நாம் காலம் தள்ள முடியும், அப்போதுதான் இந்த உலக சகாயம் கிடைக்கும், உலகத்தாருக்கு நாம் சற்று வளைந்து கொடுத்தால் தான் பிழைக்க முடியும் இல்லையென்றால் பிழைக்கத் தெரியாதவன் என்ற பெயர் எடுக்க நேரிடும் என்றெல்லாம் எண்ணத்தை உருவாக்கியிருக்கிறான். எனவே தான் அநேகர் ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒருகால் என்ற மெத்தனப்போக்கை கடை பிடிக்கின்றனர். அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் உலகத் தன்மைப் பற்றி எழுதும்போது, "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனி டத்தில் பிதாவின் அன்பில்லை, ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள், உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிற வனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" என்று எழுதுகிறார் (1யோவான் 2:15-17). யோவான் 3:16ல் "தேவன் உலகத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்" என்று வாசிக்கிறோம், ஆனால் 1யோவான் 2:15:17 வசனங்களில் "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் என்று தேவன் சொல்கிறார்.

அப்படியென்றால், இதன் பொருள் என்ன? இந்த உலகம் இரண்டு ராஜ்யங்களை உள்ளடக்கியது ஒன்று கிறிஸ்துவின் ராஜ்யம், இரண்டாவது பிசாசின் ராஜ்யம் இந்த உலகத்தில் ஒருவன் இந்த இரண்டு இராஜ்யங்களுள் ஒன்றில் தான் இருக்க வேண்டும். பிசாசு தனக்கென அநேகரை பிடித்து வைத்துக்கொண்டு தனக்கென ஒரு ராஜ்யம் அல்லது உலகத்தை வைத்திருக்கிறான்

அந்த துன்மார்க்கமான உலகத்தை நாம் நேசிக்கக்கூடாது. அதில் அன்புகூரக்கூடாது. ஏனென்றால், ஒருவன் அந்த உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து (மத்தேயு 6:24ல்) இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது என்று சொல்லியிருக்கிறார். எனவே, வாலிப நெஞ்சங்களே, இந்த வாலிப வயதில் நாம் உலக ஆசை இல்லாதவர் களாய், தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்வோமானால் தேவன் நம்மில் பிரியமாயிருந்து இந்த உலகத்தில் நாம் மகிழ்ச்சியாய் வாழ தேவையான வைகளை தம்முடைய திருச்சித்தத்தின்படி நமக்குத்தருந்தருளுவார். நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. இந்த உலகத்தில் சில வருடங்கள் வாழ நாம் தேவனால் நியமிக்கப்பட்டிருக் கிறோம். இந்த பூமி நமக்கு சொந்தமல்ல எனவே, நாம் இந்த பூமியிலுள்ளவை களையல்ல, மேலானவைகளையே நாடும் தேவனுடைய நாமத்தை இந்த உலகில் மகிமைப்படுத்துவோம் கர்த்தம் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!.

**பென்னி மார்ட்டின்**

## நாளும் நடப்பும்

1. *உலக அதிசியங்களில் ஒன்றான தாஜ்மஹாலின் பளிங்குக் கற்கள் காற்றில் உள்ள தூசி படிந்து மஞ்சள் நிறமாக மாறிவருகிறது.*
2. *சென்னை அருகே செய்யூரில் ரூ. 16 ஆயிரம் கோடியில் மெகா அனல்மின் நிலையம் - மத்திய மின்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே தகவல்.*
3. *மேட்டூர் அணை இந்த ஆண்டில் நான்காவது முறையாக நிரம்பியது.*
4. *2005-ல் வரதட்சணை கொடுமைக்கு 6,787 பேர் இந்தியாவில் பலி. அமைச்சர் ரேணுகா சௌத்ரி தகவல்.*
5. *மத்திய அமெரிக்காவில் சூறாவளியால் 98 பேர் பலி.*
6. *பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நாவஸ்ஷரீப் பாகிஸ்தானுக்குள் நுழைய அனுமதி மறுப்பு. முஷாரப் அதிரடி*
7. *ஹாக்கி : இந்தியாவுக்கு மீண்டும் ஆசியக் கோப்பை.*
8. *ஒருநாள் கிரிக்கெட்டில் இங்கிலாந்து 4-3 என்ற கணக்கில் இந்தியாவை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.*

# விசுவாசத்தின் அடிப்படைகள்

இயேசு ஸ்தாபித்த ஒன்றான மெய்சபையை அடையாளம் கண்டு கொள்வதற்காக தேவனுடைய மாதிரியாகிய அவருடைய குமாரனுடைய புதிய ஏற்பாட்டை நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். இதுவரை நாம் கிறிஸ்துவின் சபை மனிதர்கள் ஸ்தாபித்திருக்கிற மார்க்கப்பிரிவினை சபைகளிலிருந்து வேறுபட்டிருக்கிறது என்று பார்த்திருக்கிறோம்.

கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாட்டு மாதிரியை, அந்த மாதிரியின் பாகங்களை மிக ஜாக்கிரதையாக, விவரமாக ஆராயும்போது கிறிஸ்துவின் சபை மார்க்கப்பிரிவினை சபைகளிலிருந்து கீழ்காணும் விதங்களில் வித்தியாசப்படுகின்றது என்று நாம் பார்த்திருக்கிறோம்.

1. முதலாவது, கிறிஸ்துவின் சபையைக்கட்டியவர் அல்லது ஸ்தாபகர் இயேசு கிறிஸ்து, நாங்களும் இயேசு கிறிஸ்துவைத்தான் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற மார்க்கப்பிரிவினை சபை ஸ்தாபகர்கள் அல்ல.

2. இரண்டாவது, இயேசு தம்முடைய சபையை சுமார் கி.பி. 30ல் எருசலேமில் ஸ்தாபித்தார். வேறு எந்த காலத்திலோ, ரோம், இங்கிலாந்து, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அல்ல.

3. மூன்றாவது, கிறிஸ்துவின் சபையின் பெயர் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது; கத்தோலிக்க சபை, பெந்தெகொஸ்தே சபை, தென்னிந்திய திருச்சபை என்றெல்லாம் வேதாகமத்தில் இல்லை.

4. நான்காவது, கிறிஸ்துவின் சபை தேவனை ஆவியோடும், உண்மையோடும் அவர் புதிய ஏற்பாட்டில் கட்டளையிட்டிருக்கிறபடி ஆராதிக்கின்றது. முதல் நூற்றாண்டில், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் இருந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒன்று கூடினபோது கீழ்காணும் காரியங்களை செய்திருக்கிறார்கள். அவர்கள் ஜெபித்திருக்கிறார்கள்; கர்த்தருடைய ஊழியம் செய்யப்படும் படியாக கர்த்தருக்கென்று காணிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள்; தேவனுடைய வசனங்களைப் படித்திருக்கிறார்கள்; கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றிருக்கிறார்கள்; பியானோ, ஆர்கான் போன்ற இசைக் கருவிகள் இல்லாமல் ஆவிக்குரிய பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

5. ஐந்தாவது, கிறிஸ்துவின் சபை அவர் புதிய ஏற்பாட்டில் கட்டளையிட்டிருக்கிறபடியே அமைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து மாத்திரமே சபையின் தலையாயிருக்கிறார். ஒவ்வொரு பிராந்திய கிறிஸ்துவின் சபையும் தன்னிச்சையாகவும், சுயமாக ஆளுகிறதாயும் இருக்கிறது. கிறிஸ்துவின் சபைக்கு எந்த பிராந்திய, மாநில, தேசிய, அல்லது சர்வதேச ஆளுகை அமைப்புகளோ இல்லை. உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் தேவன் ஏற்படுத்தியிருக்கிற தகுதி அம்சத்திற்கு உட்ப்படும்போது, இப்படிப்பட்ட இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட சகோதரர்கள் கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு பிராந்திய சபையில் சரியான முறையில் செயல்படுத்தப்படுகிறதா

என்பதை நிச்சயப்படுத்த மூப்பர்களாக சேவை செய்ய நியமிக்கப் படுகிறார்கள். அதைப்போலவே, உண்மையுள்ள சகோதரர்கள் தேவனுடைய தகுதியம்சத்திற்கு உட்படும்போது, மூப்பர்களின் தலைமையில் உதவிக்காரர்களாக சேவை செய்ய நியமிக்கப்படுகிறார்கள். அதன்பிறகு பரிசுத்தவான்கள், சீஷர்கள் அல்லது சகோதரர்களாகிய தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இதில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற பிரசங்கியாரும் உள்ளடக்கம்.

கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபைக்கான தேவனுடைய மாதிரியின் அடுத்த பகுதி இதோ;

புதிய ஏற்பாட்டில் சபை அதன் ஊழியம் சம்பந்தமாக தனித்துவம் பெற்றிருக்கிறது.

கிறிஸ்துவின் சபையின் ஊழியத்தில் முதலிடம் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு கொடுக்கப்படுகிறது. இந்த இலக்கை நாம் நம்மால் முடிந்தவரை ஆத்துமாக்களை இரட்சிக்க வல்ல சுவிசேஷத்தை அநேகருக்குப் போதிப்பதனால் நிறைவேற்றுகிறோம். இந்த உண்மையை தெளிவுபடுத்துகிற அநேக வசனங்களை கவனிப்போம்.

மத்தேயு 28:18-20 வசனங்களில் நாம் வாசிக்கும்போது இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் தமக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார். இயேசுவுக்கு அதிகாரம் இருந்தபடியினால் அப்போஸ்தலர்களுக்கும், அப்போது இருந்த எல்லா கிறிஸ்தவர்களுக்கும் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று கட்டளையிட்டார். கிறிஸ்துவினிடத்திலிருந்து வரும் அடுத்த கட்டளை இயேசுவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிய விரும்புவர்களுக் கெல்லாம் ஞானஸ்நானங் கொடுக்க வேண்டும் என்பதாகும். அடுத்து, இயேசு தம்முடைய புதிய ஏற்பாட்டில் கட்டளையிட்டவைகளையெல்லாம் புதிய கிறஸ்தவர்களுக்கு தொடர்ந்து போதிக்க வேண்டும்.

மாற்கு 16:15,16 மறுபடியும் நம்முடைய அன்புள்ள எஜமான் உலக மெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்கிற சபையின் பணியை வலியுறுத்துகிறார். இரட்சிப்பின் சுவிசேஷத்தை சர்வ சிருஷ்டிக்கும் எடுத்துச் செல்வது நித்திய முக்கியமானது என்பதைக் கவனியுங்கள். ஞானஸ்நானம் உட்பட இயேசுவின் அந்த சுவிசேஷத்தை விசுவாசிக்கிற, அதற்கு கீழ்ப்படிகிற ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படு வார்கள்.

ரோமர். 1:16 பிரியமான அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படவில்லை! அவர் ஏன் வெட்கப்பட வில்லை? ஏனென்றால், அந்த சுவிசேஷமானது ஜனங்களின் ஆத்துமாக்களை இரட்சிக்க தேவபெலனாயிருக்கிறது.

தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றுதலில் கிறிஸ்துவின் சபை முதலிடத்தை தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தை களை அநேகருக்குப் போதிப்பதனால் ஆத்துமாக்களை இரட்சிப்பதில் கொடுக்கிறது.

கிறிஸ்துவின் சபையின் ஊழியத்தின் இரண்டாவது பகுதி ஆவிக்குரிய பிரகாரமாக அதைக்கட்டுவதுதான்.

எபேசியர் 4:11-16 வசனங்களை நாம் வாசிக்கும்போது இங்கே தேவன் கிறிஸ்துவின் சரீரத்தை பக்தி விருத்தி அடையச் செய்வதின் அவசியத்தைப் பற்றிப் பேசுகிறார். நாம் ஏற்கனவே பார்த்தபடி கிறிஸ்துவின் சரீரம் அவருடைய சபையாயிருக்கிறது (எபேசியர் 1:22,23).

ஆவிக்குரிய பிரகாரமாக சபையனாது எப்படி பக்தி விருத்தி அடைய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறதைக் கவனியுங்கள், அது தேவனுடைய குமாரனைப் பற்றும் அறிவினாலே செய்யப்படவேண்டும். மேலும் தேவனுடைய வசனமாகிய சத்தியத்தினாலேயும் (யோவான் 17:17) அன்பின் ஆவியினாலும் செய்யப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் போதிப்பது ஏன் முக்கியமானது?

எபிரெயர் 5:12-14 வசனங்களில் தேவனுடைய வார்த்தை ஞானப்பாலையும், பலமான ஆகாரத்தையும் உள்ளடக்கியது அவைகளினால் நீங்களும், நானும் ஆவிக்குரிய பிரகாரமாக வளர முடியும்.

யாக்கோபு 1:21ல் அவ்விதமான ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தையை நம் உள்ளத்தில் நாட்டவேண்டும். மேலும் ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்பட தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து படிக்க வேண்டும், தியானிக்க வேண்டும் அதைப்பயன்படுத்த வேண்டும்.

1யோவான் 2:14யை வாசிக்கவும் நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து படிப்பதாலும், தியானிப்பதினாலும், உபயோகப் படுத்துவதனாலும் நம்முடைய இருதயங்களில் வாசம் செய்ய அனுமதிக்கும் போது அது நம்மை பலப்படுத்தி, நாம் பொல்லாங்கனை மேற்கொள்ள உதவி செய்யும். இம்முறையில் தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் பெலனடைந்து கட்டப் பட்டால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையும் கட்டப்பட்டு பலப்படுத்தப்படுகிறது.

இந்தக்கருத்தானது எபேசியர் 4:16லும் காணப்படுகிறது. அங்கே தேவன் முழு சரீரத்தைப் பற்றிப் பேசுகிறார். அதாவது சபையைப்பற்றிப் பேசுகிறார், இயேசுவின் ஆவிக்குரிய சரீரத்தின் ஒவ்வொரு கணுவையும், ஒவ்வொரு அவயவத்தின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகிறார். நிச்சயமாகவே இயேசுவின் ஆவிக்குரிய சரீரத்தின் அவயவங்களும், கணுக்களும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு சேர்ந்து இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் சபை வளர்ந்து கட்டப்பட்டு, அன்பில் பலப்பட தன்னுடைய பங்கை செய்ய வேண்டும்.

மேற்கூறப்பட்ட வசனங்களை ஆதாரமாகக் கொண்டு கீழ்காணும் முடிவுக்கு நாம் வரலாம், கிறிஸ்துவின் சபை ஊழியத்தின் இந்த பகுதியை நிறைவேற்றுகிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தை ஒவ்வொரு கிறிஸ்துவின் சபையிலும் அதன் முழு அழகோடும், ஆத்துமாவை இரட்சிக்கத்தக்க வல்லமையோடும் தொடர்ந்து போதிக்கப்படுகிறதா என்று நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் சபையின் ஊழியத்தின் மூன்றாவது பகுதி சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது.

1 தீமோத்தேயு 3:15யை வாசியுங்கள் இந்த வசனத்தில் தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய வீடு அல்லது குடும்பத்தைப்பற்றிப் பேசுகிறார் அதை ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் அடையாளம் காட்டுகிறார். தயவு செய்து அவர் சபையை எப்படி விவரிக் கிறார் என்று கவனியுங்கள்.

சபையானது உண்மையாகவே தேவனுடைய வசனமாகிய சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. தூணின் நோக்கம் என்ன? அது கட்டிடத்தைத் தாங்குவதற்கு. எனவே, கிறிஸ்துவின் ஊழியத்தின் ஒரு முக்கியமான பங்கு தங்கள் பாவங்களில் இழந்து போயிருக்கிறவர்களுக்கு முன்பாக தேவனுடைய வசனத்தைத் தாங்குவதாகும். எப்படியாயினும் சபையானது சத்தியத்தை பாதுகாக்க வேண்டும். கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமானது சத்தியம் எல்லா இடங்களிலும் பரம்புகிறது என்று நிச்சயப்படுத்து வதினால் சத்தியத்தை தாங்க வேண்டும். ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய தேவனுடைய குடும்பம் உயிரோட்டமுள்ள செய்தியைப் பாதுகாத்து, உண்மையாக வருங்கால தலைமுறையினருக்கு அதைப் பகிர்ந்து கொடுக்க நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

அதைப்போலவே, தேவன் கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபை தம்முடைய வசனத்திற்கு ஆதாரமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். அதாவது சபையானது தேவனுடைய வார்த்தையில் பாதுகாப்பாக நிற்க வேண்டும் அதிலிருந்து எவ்விதத்திலும் வழிவிலகிச் செல்லக்கூடாது. நம்முடைய ஆதாரமானது பலவீனமான உபதேசங்களோ, மனுஷருடைய கற்பனைகளோ அல்ல! நம்முடைய ஆதாரம் தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தையாயிருக்கிறது. இது சாத்தான் தேவனுக்கு விரோதமாகவும், தம்முடைய ஜனங்களுக்கு விரோதமாகவும் நடத்தும் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறது.

சபையானது ஒவ்வொரு உபதேச காற்றினால் அடிபட்டு அலையக் கூடாது. மாறாக, தேவனுடைய அசைக்க முடியாத வார்த்தையில் நாம் ஆழமாக வேரூன்றி நிற்க வேண்டும் அதற்கு அந்த வார்த்தைக்கு உறுதியான ஆதாரமாயிருக்கிற அவருடைய அசைக்க முடியாத சபையில் நாம் நிலைத்து நிற்க வேண்டும்.

அடுத்த மாதம், இயேசு ஸ்தாபித்த, தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்த ஒன்றான மெய் சபையின் ஊழியத்தின் மற்ற பகுதிகளை நாம் படிப்போம். இந்தக்கட்டுரையின் ஆரம்பத்தில், புதிய ஏற்பாட்டு மாதிரியில் தேவன் அந்த சபையை எப்படி விவரித்திருக்கிறார் என்று சுருக்கமாக நாங்கள் சொல்லியிருந்தோம். தேவனுடைய விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த ஒன்றான மெய்சபையில் அங்கத்தினராக இருக்கிறீர்களா? அப்படிஇல்லையென்றால், எங்களிடம் தொடர்பு கொள்ளுங்கள் நீங்கள் அந்த அற்புதமான குடும்பத்தில் அங்கத்தினராக நாங்கள் உதவி செய்வோம்!

**பென்னிமார்ட்டின் சார்லிடீபால்மா**

# நமது செயல்களை மூடி மறைக்கவும் நியாயப்படுத்தவும் நாம் கூறும் போலி சமாதானங்கள்

தங்களுடைய செயல்களை நியாயப்படுத்த முயற்சிப்பதில் மக்கள் தீவிரமாக இருப்பதுண்டு. எல்லாரும் அதைச் செய்கிறார்கள் என நாம் அடிக்கடி கேட்பது இதற்கு உதாரணமாகும். அது பொய் பேசுவதோ, நேர்மையற்ற செயலோ, விபச்சாரமோ, இலஞ்சம் வாங்குவதோ அல்லது கொடுப்பதோ அல்லது இது போன்ற ஆயிரக்கணக்கான பிற காரியங்களைச் செய்யும் ஒருவன் கூறும் போலிச் சமாதானம் எல்லாரும் அதைச் செய்கிறார்களே என்பது தான். குற்றம் செய்பவனில் அதே பாதையில் நாமும் நடப்பது சரிதான் என்று தவறைச் செய்பவன் நினைக்கிறான். சந்தேகமின்றி, எல்லாருமே அதைச் செய்வது இல்லை. ஆனால், ஒருவேளை, எல்லாருமே அப்படிச் செய்வதாக இருப்பின், அது சரியாகி விடுமா? ஒரு காரியம் தவறு என்றால், எத்தனை பேர் அதைச் செய்தாலும் அது தவறாகத் தான் இருக்க முடியும். ஒரு காரியம் சரியென்றால், பிறர் அதைச் செய்யாவிட்டாலும் நாம் அதைச் செய்ய வேண்டும், சரியாகச் செய்யும் ஒரு சிலரில் நாமும் ஒருவராக இருந்தால், தவறும் கெட்டதுமான செயலிலிருந்து விலகி சரியானதைச் செய்யும் நம்மை உலக மக்கள் மதிப்பார்கள் (ரோமர் 13:13; 1 தெச. 4:12).

நல்ல காரியங்களைச் செய்யாமல் இருப்பதை நியாயம்படுத்த சில வேளைகளில் நாம் சாக்குப் போக்குகளைச் சொல்ல முயற்சிக்கிறோம். ஆராதனையில் கலந்து கொள்ள மக்களை அழைப்பது ஒருவீண் வேலை எனக் கூறுபவர்களும் சபையில் இருக்கின்றனர். தங்களுடைய நண்பர்களையும், பிறரையும் பல தடவைகளில் அழைத்தாலும், ஆராதனைக்கு வரவோ அல்லது வேதாகமப் பாடங்கள் படிக்கவோ அவர்களுக்குச் சிறிதும் ஆர்வமில்லை என அவர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் பிறருக்குப் போதிப்பதை விட்டு விட்டிருக்கின்றனர். ஆனால், பிரச்சனை என்னவென்றால், மக்களுக்கு ஆர்வமில்லை என்பதாக பல தடவைகள் பிறர் கூறக்கேட்டு, அவர்களும் அதேபோல் சொல்ல ஆரம்பிக்கின்றனர். இது சாத்தானுடைய ஒரு விளம்பர தந்திரம். இதில் கர்த்தரின் மக்கள் பலர் வீழ்ந்து போயிருக்கின்றனர். ஒரு தொழிலதிபர் இதே போன்ற ஒரு காரணத்தை உபயோகித்தால் எப்படியிருக்கும்? நான் உற்பத்தி செய்த பொருளை விற்க முயற்சிப்பதில் பலன் எதுவுமில்லை; ஏனென்றால் ஒருவருக்கும் அதில் ஆர்வமில்லை, யாரும் அதை வாங்கமாட்டார்கள். இந்த நிலையை அந்தத் தொழிலதிபர் தொடர்ந்தால், விரைவில் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி

சாப்பாட்டிற்கே தாளம் போட வேண்டியது வரும். விற்பதற்கு ஒரு பொருள் அவர்களிடம் உள்ளது என அவர்கள் நம்புகின்றனர், அவ்வாறே செயல்படுகின்றனர். பல தடவைகள் மீண்டும், மீண்டுமாக அவர்கள் தோல்வியைத் தழுவினாலும் கூட அவர்கள் துவண்டு போவதில்லை. கடின உழைப்புக்கு நிச்சயம் பலன் உண்டு என அவர்கள் நம்புகின்றனர். அவ்வாறே தங்கள் பொருளை விற்கவும் செய்கிறார்கள். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் நம்மை இரட்சிக்க முடியும் என்றும் நாம் விசுவாசித்தால், நமக்கு அச்செய்தி உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்; நாம் கிறிஸ்துவுக்குள் பல ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த முடியும்; நமது நண்பர்களை உற்சாகப்படுத்தி, ஆராதனையில் கலந்து கொள்ளவும், வேதாகமத்தைக் கற்றுக்கொள்ளவும் செய்ய முடியும்; அல்லது நாம் சாதிக்க முயற்சிக்கும் வேறு காரியங்களையும் அடைய முடியும். அப்போஸ்த லருடைய நடபடிகள் 8ம் அதிகாரத்தைப் படியுங்கள்.

கிறிஸ்துவின் சபையிலிருந்து ஒரு அஞ்சல்வழி வேதாகமக்கல்வி இலவசமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை சிலர் வெளியில் சொல்லுவது கூட கிடையாது. மக்கள் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளபடியால், கிறிஸ்துவின் சபையிலிருந்து வருகிறதென்றால் அப்படிப்பட்ட அஞ்சல் வழிக்கல்வியின் பாடங்களைத் தொடக்கூடமாட்டார்கள் என இவர்கள் கருதுகின்றனர். என்றபோதிலும், அநேகமாக அவர்கள் குறிப்பிடும் பகுதியில் சபையை அறிந்தவர்கள் மிகச் சிலரே இருக்கக்கூடும். சபையைப் பற்றி மிகக் கொஞ்சமே அறிந்தவர்கள் அல்லது முற்றிலுமாக அறியாதவர்கள் வசிக்கும் பகுதியிலே சபையைப் பற்றி மக்கள் எவ்வாறு தவறான அபிப்பிராயம் கொள்ள முடியும்? சபையை அவர்களிடம் அறிமுகம் செய்த (தவறான) முறையின் காரணமாக, ஒருவேளை நாம் தான் பிரட்சனையாக இருக்கக்கூடும். முக்கியமான விஷயம் என்னவென்றால், சத்தியம் அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்றிருந்தால், இப்போதோ அல்லது விரைவிலோ சபையைப் பற்றி அவர்கள் அறிந்தாக வேண்டும். ஏனென்றால், கிறிஸ்துவைப் பற்றி சத்தியத்தில், அவருடைய சபையைப் பற்றிய சத்தியமும் அடங்கியுள்ளது; அந்த சபை கர்த்தருடைய நாமத்தைத் தாங்கியுள்ளது; எனவே, ஒருவர் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப் பட்டால், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக்கி தமது சபையில் கிறிஸ்து அவரை சேர்த்துக் கொள்ளுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தைப் படிக்கவும். இப்போது, இவை அனைத்தையும் ஒருவன் அறிந்து கொள்ளாமல், எப்படி அவனுக்கு அஞ்சல்வழி வேதாகமக்கல்வியை கற்பிக்க இயலும் அல்லது சத்தியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுக்க முடியும்? சபையைப் பற்றிய தவறான அபிப்பிராயம் கொண்டுள்ள ஒருவனிடம் சபையைப் பற்றி தெளிவுபடுத்தாமல், நீ போதிக்க ஆரம்பித்து, பின்னர் உன்னை கிறிஸ்துவின் சபையின் பிரதிநிதி என அவன் அறியும் போது

உன்னைப்பற்றி தவறாக நினைப்பான். கர்த்தரையும் அவருடைய நாமத்தையும் கூற ஏன் வெட்கப்படுகிறாய்? மேலும், கர்த்தரைப் பற்றியும் அவருடைய சபையைப் பற்றியும் ஒருவன் மிகவும் தவறான கருத்துடன் இருந்தால், ஒருவேளை மனந்திரும்ப லாயக்கற்ற கொழுத்த இருதயம் படைத்தவனாகவும் அவன் இருக்கக்கூடும்.

இவை அனைத்திலும் காணும் உண்மை என்னவென்றால், அநேகர் இப்படிச் செய்கின்றனர் அல்லது பலர் இப்படிச் செய்வதில்லை என்ற அடிப்படையில் தங்களுடைய செயல்களை நியாயப்படுத்த முயலுவோர் உள்ளனர். அல்லது, சத்தியத்தை சிலர் அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என அவர்கள் பயப்படுகின்றனர். என்றாலும், நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், பரலோகத்திற்கு கர்த்தரே வழி, ஒரே வழி, அவருடைய வழி இடுக்கண் நிறைந்தது.(யோ. 14:6, மத்தேயு 7:13,14). நாம் எதைச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ, அதை மற்ற எவரும் செய்தாலும் செய்யாவிட்டாலும், அதை நாம் செய்ய வேண்டும். அல்லது கர்த்தர் தடை செய்தவற்றை, உலகம் முழுவதுமே செய்து கொண்டிருந்தாலும், நாம் செய்யலாகாது. அவ்வாறு செய்தால் அவரால் நாம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டோம். மேலுமாக, கர்த்தரை நாம் உண்மையாகவே விசுவாசித்து, அவருக்கு நமது வாழ்க்கையில் முதலிடம் தர தயாராக இருக்கும்போது, பல ஆத்துமாக்களுக்கு கற்பித்து அவர்களை மனந்திருப்பி கிறிஸ்துவிடம் சேர்ப்பிக்கும் பல சந்தர்ப்பங்களைக் கடைப்பிடிப்போம். சக்கு போக்கு சொல்ல மனம் இடம் தராது; நாம் கர்த்தரை நேசிப்போம், அவரைத் தாராளமாக ஏற்றுக்கொள்வோம், உலகத்திற்கு அவரை அறிவிப்போம், அவருக்கு உண்மையாகவே ஊழியஞ் செய்வோம், அவருடைய மதிப்பிற்கும், புகழுக்கும் பங்கம் விளைவிக்கமாட்டோம். இவை அனைத்திலும் நாம் எதை விசுவாசிக்கிறோம். நமது விசுவாசத்தின் பலம், நாம் பரலோகத்திற்குச் செல்ல எவ்வளவு வாஞ்சையுடையவர்ளாக இருக்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது.

**J.C. Choate** **J.C. சோட்**

## அற்புதங்களுக்கான காரணங்கள்

- **விசுவாசிகளை உண்டாக்க (யோவா. 4:48)**
- **வசனத்தை உறுதிப்படுத்த (மாற்கு 16:20)**
- **எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த (யோவா 16:13)**

அப்போஸ்தலனாகிய பேதுரு உள்ளமும், உடலும் தூய்மையாக காத்துக் கொள்ளும்படியாக இயேசு கிறிஸ்துவிடம் பயமும், பக்தியும் உடையவராக காணப்பட்டார். தன்னுடைய தவறுகளை உடனே ஒப்புக் கொள்ளும் மனங்கொண்டவர். மற்றவர்களுக்காக பயந்து வாழ்ந்தவர். ஆகவேதான், இயேசுவை மூன்ற முறை மறுதலித்து அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். (மத். 26:74) மற்றவர்களுக்காக பயந்து வாழ்ந்த பேருதுவை இயேசு கிறிஸ்து பெலப்படுத்தினார். அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தில் தைரியமாய் ஆயிரக்கணக்கான யூதர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (அப். 2:14-41).

**III பேதுருவின் ஊழியம்**

பேதுருவின் ஊழியத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் காணலாம். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் முதல் பகுதி முழுவதும் அதாவது 2ஆம் அதிகாரத்திலிருந்து 12 ஆம் அதிகாரம் வரை பேதுருவின் ஊழியத்தைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. பெந்தெகொஸ்தே நாளில் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்தினார். அப்போது ஏறக்குறைய 3,000 பேர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 2:14-41). பின்பு எருசலேம் தேவாலயத்திலே பிரவேசிக்கும்போது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு பிச்சைக்காரனை சுகப்படுத்தி அநேகரின் கண்களுக்கு ஆச்சரியத்தை எற்படுத்தினார் (அப். 3:1-10).

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் பொய் சொன்ன அனனியா, சப்பீராள் என்ற கணவன், மனைவியை சபித்தான் உடனே இருவரும் மரித்தனர் (அப். 5:1-11) பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழல்பட்டு பிணியாளிகள் அனைவரும் குணமாக்கப்பட்டனர். (அப். 5:15,16) மரித்த தபீத்தாளை உயிரோடே எழுப்பினார். (அப். 9:37-41) பரிசுத்த ஆவியின் ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்தார் (அப். 8:14-17).

பேருது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யூதர்களுக்கு அறிவித்ததினி மித்தம் ஆசாரியர்களும், தேவாலயத்து சேனைத் தலைவனும் சதுசேயரும் மிகுந்த கோபங்கொண்டு பேருதுவையும், யோவானையும் பிடித்து மறுநாள் வரை காவலில் வைத்தனர் (அப். 4:1-3) பின்பு மறுபடியுமாக மிகுந்த தைரியத்துடன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர்கள் அவனை பயமுறுத்தினார்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாது என்று கட்டளை யிட்டார்கள் (அப். 4:17,18). அப்பொழுது பேதுரு அவர்களை நோக்கி நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக்

கூடாதே என்றார் (அப். 4:20) மேலும் பேதுரு அவர்களை நோக்கி மனுஷருக்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்றான் (அப். 5:29) இப்படிச் சொன்னதினிமித்தம் யூத மதத்தலைவர்கள் மூர்க்கமடைந்து கொலை செய்ய யோசனை பண்ணினார்கள் (அப். 5:33) அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம் பெற்ற நியாய சாஸ்திரி கமாலியேல் என்ற பரிசேயன் அவர்களைப் பார்த்து இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள். ஏனென்றால், இந்த யோசனையும், இந்த கிரியையும் (பேதுருவின் ஊழியம்) மனுஷரால் உண்டாயிருந்ததனால் ஒழிந்துபோம் தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழிந்துவிட உங்களால் கூடாது தேவனோடே போர் செய்கிறவர் களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான். அப்பொழுது யூத மதத் தலைவர்கள் கமாலியேலின் யோசனைக்கு உடன்பட்டு பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் வரவழைத்து அவர்களை அடித்து இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசக்கூடாது என்று கட்டளையிட்டு அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காக தாங்கள் அவமான மடைவதற்கு பாத்திரராக எண்ணப்பட்டபடியால் சந்தோஷமாய் புறப்பட்டுப் போய் தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் (அப். 5:34-42).

யூதர்களுக்கு மாத்திரம் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருந்த அப்போஸ்தலனாகிய பேதுரு புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைச் சொல்லும் படியாக தேவனால் வழிநடத்தப்பட்டார். (அப். 10:9-20) இது குறித்து பேதுரு புறஜாதியான நூற்றுக்கு அதிபதி கொர்நெலியுவிடம் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றான் (அப். 10:34,35) கொர்நெலியு வீட்டாருக்கு ஞானஸ்நானம் கொடுத்து விட்டு எருசலேம் வந்து நடந்த சம்பவங்களை விவரித்தார் (அப். 11:1-8). பேதுரு அப்போஸ்தலனாகிய பவுலையும் சந்தித்து உள்ளார். பேதுருவிடம் பவுல் 15 நாட்கள் தங்கியுள்ளார் (கலாத்.1:17,18) பின்பு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு புறஜாதிகள் கீழ்படிவதற்கு நியாயப்பிரமாணமும், விருத்த சேதனமும் தேவை இல்லை என்பது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எருசலேமில் கலந்து கொண்டார் பேதுரு. (அப். 15:7-14) மேலும் புதிய ஏற்பாட்டில் இரண்டு நிருபங்களை எழுதும்படியாக பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டார் (1பேதுரு, 2 பேதுரு).

பேதுரு, இயேசு கிறிஸ்துவிடம் கற்றுக்கொண்ட, தாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பைக் குறித்தும் (1பேதுரு 1:3-12) தன் வாழ்க்கையில் செய்து வருகிற கீழ்படிதல் மற்றும் பரிசுத்தமாக காத்துக் கொள்ளுதல் (1பேதுரு 1:13-23) குறித்தும் சபையாருக்கு மூப்பர்களில் ஒருவராக இருந்து கள்ளப்போதகத்தின் எச்சரிக்கை குறித்தும் (2பேது 2:1-22) இந்த உலகத்தின் முடிவு குறித்தும் இயேசுவின் இரண்டாம் வருகையின் நம்பிக்கையைக்

குறித்தும், தேவன் நீடிய பொறுமையாக இருந்து ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப விரும்புகிறார் என்றும் தமது நிருபத்தில் எழுதியிருக்கிறார் (2பேதுரு 3:9-12) அதோடு பவுலின் நிருபத்தைக் குறித்தும் நல்ல விமர்சனம் செய்திருக்கிறர் (வச. 15-16).

இதை வாசிக்கும் அன்பானவர்களே, அப்போஸ்தலரின் ஊழியம் எப்படிப்பட்டதாக உள்ளது என்பதை அறிந்திருப்பீர்கள். இன்றைய நாட்களில் சிலர் தாங்கள் அப்போஸ்தலர் என்றும் தங்களுக்கு அற்புத சுகமளிக்கும் வரம் இருக்கிறதென்றும் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்! அன்றைய நாட்களிலிருந்த அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்கள் கண்களினால் காணக்கூடியதும், தொட்டு உணரக்கூடியதுமாக இருந்தது. ஆனால், இன்றைய நாட்களில் தங்களை அப்போஸ்தலர் என்று அழைத்துக் கொண்டு இருப்பவர்களால் எந்த அற்புத சுகமும் கொடுப்பது இல்லை. மாறாக கண்களினால் காணக்கூடாததும், தொட்டு உணரக்கூடாததுமான நெஞ்சுவலி, அல்சர், வயிற்றில் கட்டி இப்படிப்பட்டக் காரியங்களுக்கு ஜெபம் செய்து சுகம் தருவதாக கூறுகிறார்கள். உண்மையிலேயே இப்படிப் பட்ட காரியங்கள் கூட சுகமாவதில்லை என்பதே உண்மை!. ஏனென்றால், இவர்கள் கள்ள அப்போஸ்தலர், கபடமுள்ள வேலையாட்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்டக்கூடியவர்கள் இவர்களுடைய ஜெபத்தை தேவன் கேட்பதில்லை (யோவான் 9:31).


அப்போஸ்தலரின் நிழல்பட்டாலே அநேக பிணியாளிகள் முழுமையான சுகம் பெற்றனர். இன்றைய நாளிலே சுகம் கொடுக்கிறேன் என்பவரின் நிழலில் சுகம் பெற்றுக்கொண்டவர்கள் இருக்கிறார்களா? பிறவி சப்பாணி எழுந்தான் நடந்தான், குதித்தான்! ஆனால், இன்று இவ்வாறு சுகம் கொடுக்கின்றார்களா? இவைகளை எல்லாம் சிந்தித்துப்பாருங்கள்.

அப்போஸ்தலர்களுக்கு அற்புதம் செய்வதற்கு ஒரு நோக்கம் கொடுக்கப்பட்டது. அந்த நோக்கம் வசனத்தை உறுதிப்படுத்தவே! (மாற்கு. 16:17-20). எனவே நாம் இவ்வசனத்தை கவனித்து நடப்பதே முக்கியமாகும்.

**(தொடரும்)** **K. பாஸ்கர், சிறுமுகை.**

## ஓய்வு நாளில் செய்யக்கூடாதவை

1. **விறகு பொறுக்கக்கூடாது. (எண் 15:3236)**
2. **அடுப்பில் நெருப்பு மூட்டக்கூடாது (யாத். 16:22,23)**
3. **சொந்தப் பேச்சை பேசக்கூடாது (ஏசாயா 58:13)**
4. **எந்தவொரு வேலையும் செய்யக்கூடாது (யாத். 31:12)**
5. **விதைக்கவோ, அறுக்கவோ கூடாது (யாத். 34:2)**



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

## திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV | சனி | காலை | 7:30 - 7:45 |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு:** எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555